// வணிக வரித்துறை //

அனுப்புநர்

திரு. ச. பிரபாகரன், பி.இ.,
உதவி ஆணையர் (மாவ),
குகை சரகம், சேலம்.

பெறுநர்

1) இணை ஆணையர் (மாநில வரி),
சேலம் கோட்டம், சேலம்.
2) இணை ஆணையர் (மாநில வரி) (செயலாக்கம்),
சேலம் கோட்டம், சேலம்.
3) துணை ஆணையர் (மாநில வரி), சேலம்
4) துணை ஆணையர் (மாநில வரி) (செயலாக்கம்),
சேலம்.
5) மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம்
6) இணை சார் பதிவாளர், சேலம்.
7) வட்டாட்சியர், சேலம் டவுன், சேலம்
8) வருவாய் கோட்ட அலுவலர், சேலம்.
9) ஆணையர், சேலம் மாநகராட்சி
10) காவல்துறை ஆய்வாளர், செவ்வாய்பேட்டை,
சேலம்
11) கிராம நிர்வாக அலுவலர்,
சேலம் டவுன், சேலம்

- ஏல நாளை தண்டோரா மூலம் பொது மக்களுக்கு
தெரியப்படுத்தும் பொருட்டு

ந.க. 260/1995/அ3, நாள்- 05.07.2018

அய்யா,

பொருள் வரி நிலுவை - உதவி ஆணையர் (மாவ) குகை சரகம், சேலம் - **திருவா.வி.சம்பத்குமார், உரிமையாளர், வரதராஜூலு ஸ்டார்ச் ப்ராடக்ட்ஸ்,** நெ.84, தெய்வநாயகம் தெரு, செவ்வை, சேலம்-2-(TNGST NO- 665924/92-93, 93-94) (CST NO- 405602/92-93, 93-94).

பார்வை சேலம் மாவட்ட அரசிதழ் எண்-9, நாள்- 21.09.2003. (ரூ.98,16,270.00)

------------

இவ்வலுவலக வரி நிலுவைதாரர் திரு. சி. சம்பத்குமார், உரிமையாளர் திருவா. வரதராஜூலு **ஸ்டார்ச் ப்ராடக்ட்ஸ்,** நெ.84, தெய்வநாயகம் தெரு, செவ்வை, சேலம்-2 என்பவர் 1992-93 மற்றும் 1993-94-ம் ஆண்டிற்கு வியாபாரம் செய்த வகையில் (தநாபொவிவச மற்றும் மவிவச கீழ்) வரிநிலுவை மொத்தமாக ரூ.98,16,270.00 செலுத்த வேண்டியுள்ளது. இவ்வரி நிலுவைக்காக மேற்படி வரிநிலுவைதாரரின் அசையாச் சொத்து வருவாய் மீட்புச் சட்டத்தின் கீழ் ஜப்தி செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஏல நாள் 08.08.2018 காலை 11.30 மணிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதுசமயம் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் காவல்துறை ஒத்துழைப்போடு பகிரங்க ஏலம் நடைபெறும். இதனை பரந்த விளம்பரம் செய்ய வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

## ஏல விளம்பரம்

1) நிலுவைதாரர் செலுத்த வேண்டிய வரி நிலுவைத்தொகை - ரூ. 98,16,270.00 + 2% வட்டித்தொகை
(நிலுவைதாரர் இதுவரை செலுத்திய வரித்தொகை - ரூ. 2,27,000.00)

2) ஏல நாள் /நேரம் - 08.08.2018 காலை 11.30 மணி

3) ஏலம் விடும் இடம் மற்றும் ஜப்தி செய்யப்பட்டுள்ள அசையாச் சொத்தின் விபரம்

--------------------------------------------------------------------------------

<u>சொத்து விபரம்</u> - (பாகப்பிரிவினை பத்திரம் 14.10.1991 டாக்குமெண்ட் நெ.201/92 ன்படி " டி " ஷெட்யூல் 5 இலக்கமிட்ட வி.சம்பத்குமார் என்பவர் பாகத்திற்கு பிரிவினையான சொத்துக்கள் விபரம் -

சேலம் மாவட்டம், சேலம் பதிவு மாவட்டம், சேலம் (3நெ) கிளை மாவட்டம், சேலம் டவுன், செவ்வாய்பேட்டை 2வது வார்டு, சோளப்பாடி சுப்ரமணிய செட்டி வீதிக்கும் தெற்கு, தாசி, நாமகிரி அம்மாள் முதலானவர்கள் விற்பனை செய்துவிட்ட வீட்டுக்கும் மேற்கு, வேணுகோபால் செட்டியார் வீட்டுக்கும் வடக்கு, தெய்வநாயகம் பிள்ளை வீதிக்கும் கிழக்கு, இதன் மத்தியில் வடபுரம் கிழமேல் 24 அடி, தென்புரம் கிழமேல் 25 அடி 6 அங்குலம், கிழபுரம் தென்வடல் 42 அடி 3 அங்குலம், மேல்புரம் தென்வடல் 42 அடி 3 அங்குலம், இதற்கு 1046 சதுரடி உள்ள மனைநிலம் முழுவதும், இதில் கட்டப்பட்டுள்ள ஆர்.சி.சி கடை கட்டிடங்கள் முதல் தளம் ஆர்.சி.சி வீடு, இரண்டாவது தளம், ஆர்.சி.சி வீடு, இவைகளில் இந்த பாகஸ்தருக்கு பிரிவினையாக சொத்து விபரம் - தெய்வநாயகம் பிள்ளை வீதிக்கும் கிழக்கு, 6 இலக்கமிட்ட வி.சுகுமார் என்பவர் பாகத்திற்கு பிரிவினையான ஈ.ஷெட்யூல் பாக கட்டிடத்திற்கும் தெற்கு, தாசி, நாமகிரி அம்மாள் முதலானவர்கள் விற்பனை செய்துள்ள வீட்டுக்கும், மேற்கு, வேணுகோபால் செட்டியார் வீட்டுக்கும் வடக்கு, இதன் மத்தியில் தென்வடல் இருபுரமும் 16 அடி கிழமேல் இருபுரமும் 20 அடி இதற்கு 320 சதுரடிகள் (29.76 ச.மீ )உள்ள பாகத்தில் கட்டப்பட்டு உள்ள ஆர்.சி.சி தார்சு கடை கட்டிடங்கள் இரண்டு மேல்புரம், கிழபுரம், சுவர்கள் சொந்த பாத்தியமும், தென்புரம் சுவர் சொந்த பாத்தியமும் வடபுரம் சுவர் பொது பாத்தியமும், இதிலுள்ள மின் இணைப்புகள் ரோலிங் ஷட்டர்கள், தெய்வநாயகம் பிள்ளை தெருவிலிருந்து இந்தக்கடை கட்டிடத்திற்கு போக வர உள்ள வழித்தடம் நடைபாத்தியமும், ஈஸ்மெண்ட் பாத்தியம் உள்படவும், கதவு நெ. 19டீ, 19ஈ, வரிவிதிப்பு எண் - 28655, 28656, வார்டு எப். பிளாக் 8, டவுன் சர்வே நெம்பர் 2க்கு சம்பந்தப்பட்டது ---------------(1) ஆண்டாள், (2) வி.வேணுகோபால், (3) வி.மணி, (4) வி.ஜெயச்சந்திரன், (5) வி.சம்பத்குமார், (6) வி. சுகுமார், (7) ஜெ. பானுமதி, (8) வி. சாந்தா,

(21)----------------மேற்படி சோளப்பாடி சுப்ரமணிய செட்டித் தெருவில் மேற்படி 1046 சதுரடி பாக நிலத்தில் அமைந்துள்ள தார்சு கட்டிடத்தில் முதல் தளத்தில் உள்ள தார்சு கட்டிடத்திற்கு செக்குபந்தி விவரம் -

மேற்படி சோளப்பாடி சுப்ரமணிய செட்டித் தெருவுக்கு தெற்கு, தாசி நாமகிரி அம்மாள் முதலானவர்களால் விற்பனை செய்யப்பட்ட வீட்டுக்கும் மேற்கும், வடக்கும், தெய்வநாயகம் பிள்ளை வீதிக்கும் கிழக்கு, இதன் மத்தியில் உள்ள கதவு எண்- 18/354, புது கதவு எண்- 67/554, ரீ சர்வேபடி வார்டு எப், பிளாக் 8, டவுன் சர்வே நம்பர் 2, கதவு எண். 19 எப்-க்கு சம்பந்தப்பட்ட சொத்து வடபுரம் கிழமேல் 24 அடி, தென்புரம் கிழமேல் 25 அடி 6 அங்குலம், கிழபுரம் தென்வடல் 42 அடி 3 அங்குலம், மேல்புரம் தென்வடல் 42 அடி 3 அங்குலம். ஆக இந்த 1046 சதுரடி பாக மனை அடி நிலத்தில் கட்டப்பட்டுள்ள தார்சு கட்டிடம் முதல் தளம் கிழமேல் 23 1/2 அடி, தென்வடல் 36 அடி ஆக இந்த 846 சதுரடி (78.70 ச.மீ) அளவில் உள்ள முதல் தளம் தார்சு கட்டிடம் முழுவதும். தெய்வநாயகம் பிள்ளை வீதியிலிருந்து அமைந்துள்ள படிக்கட்டுகள் வழியாக இந்தக் கட்டிடத்துக்கு போக வர உள்ள வழிநடை தடம் பொது பாத்தியமும், கிழபுரம், வடபுரம், மேற்புரம், தென்புரம், சுவர்கள் முழுவதும் சொந்த பாத்தியமும், மின் இணைப்பு எண்- 969, குடிநீர் இணைப்பு எண்- 29433, வீட்டு வரி விதிப்பு எண்- 28657 மேற்படி 1046 சதுரடி மனை அடிநிலத்தில் இவர் பங்குக்கு ஏற்பட்டது பிரிபடாத பொதுவில் பாதி 523 சதுரடி ஆகும்.

4) பாக்கிதாரரின் பெயரும் முகவரியும் - திரு.வி. சம்பத்குமார் த/பெ. வரதராஜூலு உரிமையாளர் திருவா. வரதராஜூலு ஸ்டார்ச் பிராடக்ட்ஸ், நெ.84, தெய்வநாயகம் தெரு, செவ்வை, சேலம்-2.

5/7/18

உதவி ஆணையர் (மாவ),
குகை சரகம், சேலம்.

05/07/18

<u>ஏல நிபந்தனைகள்-</u>

ஏலத்தில் கலந்து கொள்பவர்களுக்கான நிபந்தனைகள் அரசின் சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது ஆகும்.